**செய்தி வெளியீடு எண்: 781** **நாள்: 27.10.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 26.10.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் ‘‘திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு’’ எனும் திட்டத்தின் கீழ் 1330 குறட்பாக்களையும் ஒப்புவித்த 70 மாணவ, மாணவியர்களுக்கு தலா 10,000 ரூபாய் வீதம், மொத்தம் 7 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் ‘‘திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு’’ எனும் திட்டத்தின்கீழ் 1330 குறட்பாக்களையும் ஒப்புவிப்பு செய்யும் மாணவ, மாணவியர்கள் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குக் குறள் பரிசாக ஒவ்வொருவருக்கும் 10,000 ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2011–2012ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் 36 பேருக்கு வழங்கப்பட்டு வந்த குறள் பரிசு, 2015–2016ஆம் ஆண்டு முதல் 50 பேருக்கு என உயர்த்தப்பட்டது. மேலும், 2018–2019ஆம் ஆண்டு முதல் 50–லிருந்து 70 பேருக்கு குறள் பரிசு வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உயர்த்தி ஆணையிடப்பட்டது. இதுவரை 329 மாணவ, மாணவியருக்கு குறள் முற்றோதல் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் 2018–2019ஆம் ஆண்டிற்கு 1330 குறட்பாக்களையும் ஒப்புவித்த 70 மாணவ, மாணவியர்கள் தெரிவு செய்யப்பட்டு, குறள் முற்றோதல் பரிசு ஒட்டுமொத்தத் தொகையாக ஒவ்வொரு மாணவருக்கும் 10,000 ரூபாய் வீதம், மொத்தம் 7 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப.,, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் (பொறுப்பு) முனைவர் கோ. விசயராகவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 27.10.2018**